

திருவண்ணாமலை அருணை தமிழ்ச் சங்கம் சார்பில் நடைபெற்ற தமிழர் திருநாள் விழாவில், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் மறைமலையடிகளார், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, கலைவாணர் என்.எஸ்.கே., கிருபானந்தவாரியார், முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் பெயரில் சாதனையாளர்களுக்கு விருதுகளையும், பொற்கிழிகளையும், கவிப்பேரரசு வைரமுத்து வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் பாஸ்கரபாண்டியன், செயலாளர் வே.ஆல்பர்ட், பொருளாளர் எம்.இ.ஜமாலுதீன், டாக்டர் எ.வ.வே.கம்பன், எம்.எஸ். தரணிவேந்தன்.எம்.பி., சி.என்.அண்ணாதுரை. எம்.பி., இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன் உட்பட பலர் உள்ளனர்.

### தமிழ்நாட்டில்

# எச்.எம்.பி.வி. தொற்று மிகக் கட்டுக்குள் இருக்கிறது!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

*சென்னை, ஜன.22*

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (20.01.2025) சென்னை, மாநகர போக்குவரத்துக் கழகம், கோட்டூர்புரம் இரயில் நிலையத்திலிருந்து கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை வரை புதிய வழித்த டத்திற்கான பேருந்தினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

சமீபத்தில் கோட்டூர்புரம் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் சுப்பிரமணியன் எனும் சமூக ஆர்வலர் அவர்களின் கோரிக்கைக்கு இணங்க கோட்டூர்புரம் இரயில் நிலையத்திலிருந்து சென்னை, கிண்டி, கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை வரை பொதுமக்கள் சிகிச்சை பெறுவதற்கு ஏதுவாக சிற்றுந்து வசதி இருந்தால் மிகச் சிறப்பாக இருக்கும் என்கின்ற வகையில், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலைப்பெற்று, போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலையும் பெற்று, மேலாண் இயக்குநர் அவர்களின் முன்னிலையில் இன்று S30K எனும் சிற்றுந்து வசதி தொடங்கி வைக்கப்பட்டது.

கோட்டூர்புரம் இரயில்வே நிலையத்திலிருந்து இந்த சிற்றுந்து பொன்னியம்மன் கோவில் வழியாக நந்தனம், சைதாப்பேட்டை கடந்து பஜார் சாலை, ஆலந்தூர் சாலை வழியாக சென்று கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையை சென்றடையும். பேருந்து வசதி இங்கே அமையப்பெற்றிருப்பதற்கு பின்னால் சைதை தொகுதியில் 50% மேலான பொது மக்கள் கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையின் மருத்துவ சேவையை மேலும் பெறுவதற்கு ஏதுவாக இருக்கும் வகையில் சிற்றுந்து வசதி தற்போது தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

**11 பழைய தடங்களில் மீள தொடங்குதல் 16 பேருந்துகள்**

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, இந்த அரசுப் பொறுப்பேற்றபிறகு, சென்னை, சைதாப்பேட்டையில் 2021 ஆகஸ்ட் திங்கள் 12 ஆம் தேதி சைதாப்பேட்டை வழித்தடத்தில் ஏற்கெனவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்து தடத்தினை மீண்டும் இயக்குவதற்கு பொது மக்கள் கோரிக்கையினை ஏற்று 16 பேருந்துகள் மீள தொடங்குதல் வகையில் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலைப்பெற்று, 11 வழித்தடங்களில் மீள தொடங்குதல் என்கின்ற வகையில் 16 பேருந்து வசதிகள் தொடங்கி வைக்கப்பட்டது.

அதாவது கோட்டூர்புரம் முதல் அம்பத்தூர் OT வரையிலும், டிபன்ஸ் காலனி முதல் அசோக்நகர் மெட்ரோ ஸ்டேஷன் வரையிலும், கிண்டி திரு.வி.க. எஸ்டேட் முதல் பட்டாபிராம் வரையிலும், மேற்கு சைதாப்பேட்டை முதல் குன்றத்தூர் வரையிலும், மேற்கு சைதாப்பேட்டை முதல் டோல்கேட் வரையிலும், ஈக்காட்டுதாங்கல் முதல் பிராட்வே வரையிலும், ஈக்காட்டுதாங்கல் முதல் சுங்குவார் சத்திரம் வரையிலும், ஈக்காட்டுதாங்கல் முதல் வெள்ள வேடு வரையிலும், கோட்டூர்புரம் முதல் பிராட்வே வரையிலும், சைதாப்பேட்டை முதல் பெரம்பூர் வரையிலும், பிரா ட்வே முதல் பூந்தமல்லி வரையிலும் கடந்த கால ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்து 11 பழைய வழித்தடங்களில் 16 பேருந்துகள் மீண்டும் தொடங்கப்பட்டு மிகச் சிறப்பான வகையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

**புதிதாக 8 வழித்தடங்கள் 10 பேருந்துகள்**

சைதாப்பேட்டை முதல் கண்ணகி நகர் வரையிலும், மேற்கு சைதாப்பேட்டை முதல் ஸ்ரீபெரும்புதூர் வரையிலும், மேற்கு சைதாப்பேட்டை முதல் கோவளம் வரையிலும், பார்சன் நகர் முதல் சென்ட்ரல் வரையிலும், தாடண்டர் நகர் முதல் கோயம்பேடு வரையிலும், மேற்கு சைதாப்பேட்டை முதல் அசோக் பில்லர் வரையிலும், மேற்கு சைதாப்பேட்டை முதல் செங்கல்பட்டு வரையிலும், கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனை முதல் திரு.வி.க. எஸ்டேட் வரை சிற்றுந்துகள் 01.04.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

மேலும் கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையிலிருந்து கோட்டூர்புரம் இரயில்வே நிலையத்திலிருந்து S30K சிற்றுந்து சேவை இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சைதை தொகுதி மக்கள் மிகச் சிறப்பான வகையில் மருத்துவ சேவையினை பெறுவதற்கு பெரிய அளவில் உதவியாக இருக்கும். அதேபோல் சைதை தொகுதி மகளிர்கள் பயன்பெறும் வகையில் மாந்தோப்பு மகளிர் பள்ளி அருகில் மகளிர்க்கான உடற்பயிற்சி கூடம் ஏற்கெனவே திறந்து வைக்கப்பட்டுள்ளது. தற்போது இரண்டாவது மகளிர்க்கான உடற்பயிற்சி கூடம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர் துரைராஜ் அவர்களின் பெரும் முயற்சியோடு பள்ளிப்பட்டு ஸ்ரீராம்நகர் பகுதியில் இன்று மகளிர்க்கான உடற்பயிற்சி கூடம் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

HMPV தொற்று குறித்தான கேள்விக்கு, HMPV தொற்று தொடர்பாக நான் ஏற்கெனவே கூறியிருக்கிறேன். அந்த வைரஸ் தொற்று ஏற்பட்டால் 3 அல்லது 4 நாட்களில் தானாகவே சரியாகி விடும். அந்த வைரஸ் தொற்றுக்கு என பிரத்யேகமாக மருந்துகள் மற்றும் தனி வார்டுகள் தேவை இல்லை.அந்த வைரஸ் தொற்றுக்கு சிகிச்சையும், மருத்துவம் தேவை இல்லை, அது மிக கட்டுக்குள் இருக்கிறது. அது குறித்து பதட்டப்படத் தேவையில்லை என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாநகர போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் ஆல்பி ஜான் வர்க்கீஸ், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர் துரைராஜ், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் தமிழர் திருநாள் விழா:

# திருவண்ணாமலை காட்டுகிற மத நல்லிணக்கத்தை இந்தியா பின்பற்ற வேண்டும்!

## கவிப்பேரரசு வைரமுத்து பேருரை!

*திருவண்ணாமலை, ஜன.22 -*

திருவண்ணாமலை காட்டுகிற மத நல்லிணக்கத்தை இந்தியாவே பின்பற்ற வேண்டும் என்று திருவண்ணாமலையில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்ற அருணை தமிழ்ச்சங்க தமிழ்ப்புத்தாண்டு - தமிழர்திருநாள் விழாவில் உரையாற்றும் போது கவிப்பேரரசு வைரமுத்து குறிப்பிட்டார்.

ஒவ்வொரு ஆண்டும் அருணை தமிழ்ச்சங்கம் சார்பில் தமிழ்ப்புத்தாண்டு - தமிழர்திருநாள் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழா வில் தமிழ் தொண்டாற்றியவர்களுக்கு மறைமலை அடிகளார் விருதும், பொது தொண்டாற்றியவர்களுக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி விருதும், கலைத் தொண்டாற்றியவர்களுக்கு கலைவாணர் என்.எஸ்.கே. விருதும், ஆன்மிக தொண்டாற்றியவர்களுக்கு கிருபானந்தவாரியார் விருதும், சமூகநீதி தொண்டாற்றி வருப வர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் விருதும் வழங்கப்படுகிறது. மேலும் திருவண்ணாமலை மாநகராட்சி 39 வார்டுகளிலும் கோலப்போட்டி களில் வெற்றி பெற்ற மகளிருக்கு பரிசுகள் வழங்கப்படுகிறது.

19.01.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று திருவண்ணா மலை காந்திநகர் பைபாஸ் ரோட்டில், அமைக்கப்பட்டுள்ள அருணகிரிநாதர் அரங்கத்தில் அருணை தமிழ்ச்சங்கம் சார்பில் தமிழ்புத்தாண்டு - தமிழர்திருநாள் விழா நடைபெற்றது.

அருணை தமிழ்ச்சங்கம் சார்பில், அருணகிரிநாதர் அர ங்கத்தில், தமிழர் புத்தாண்டு, தமிழர் திருநாள் விழா நடைபெற்றது. திருக்குறள் பேரவை ப.கண்ணன், அருணகிரிநாதர் விழாக்குழு வி.தனுசு, மாவட்ட தமிழ் சங்கம் ப. இந்திரராஜன், கம்பன் தமிழ் சங்கம் ஆ.ஆறுமுகம், அருணகிரிநாதர் மணி மண்டப அறக்கட் டளை தலைவர் மா.சின்ராஜ், அறுபத்து மூவர் ஆய்வு மையம் இரா. வெங்கடேசன், திருக்குறள் சமுதாயம் தமிழ்ச்செல்வி கமலக்கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவின் தொடக்கமாக காலை 9.00 மணியளவில் மங்கள இசை நிகழ்ச்சியை மு.பெ.கிரி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.

பின்னர் சரண்யா, ஸ்ரீகலாரத்னா குழுவினரின் பரத நாட்டியத்தை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார் தொடங்கி வைத்தார். நவீன மனிதனின் கையில் என்ற தலைப்பில் நடந்த கவியரங்கத்தை தொடங்கி வைத்தார்.

கவியரங்கம் கவிஞர் பா.விஜய் தலைமையில் நடந்தது. வாழ்க்கையில் வெற்றி பெற பெரிதும் தேவை பணிவா?. துணிவா? என்ற தலைப்பில் நடந்த பட்டிமன்றத்தை எம்.எஸ். தரணிவேந்தன்.எம்.பி. தொடங்கி வைத்தார். நடுவராக பேராசிரியர் பர்வீன் சுல்தானாவும், பணிவே என்ற அணியில் கபிலா விசாலாட்சி, குருஞானாம்பிகையும், துணிவே என்ற அணியில் வளர்மதி, கவிதா ஜவகர் ஆகியோரும் வாதிட்டனர்.

அம்பேத்கர் வீரதமிழன் குழுவினரின் போர்ப்பறை நிகழ்ச்சியை எம்.எல்.ஏ. பெ.சு.தி.சரவணன் தொடங்கி வைத்தார். மாலை 4.00மணிக்கு தொடங்கிய தெருக்கூத்து நிகழ்ச்சியை மு.பெ.கிரி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். தொடர்ந்து கிராமிய இசை விருந்து நிகழ்ச்சியை சி.என்.அண்ணாதுரை. எம்.பி. தொடங்கி வைத்தார்.

**அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!**

நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய அமைச்சர் எ.வ.வேலு பேசுகையில், தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களில் சங்கம் வைத்து தமிழ் வளர்த்தவர்கள் பாண்டிய மன்னர்கள்தான். இதில் நான்காம் தமிழ்ச் சங்கம் வைத்தவர் மதுரையை சேர்ந்த பாண்டித்துரை தேவர் ஆவார்.

இந்த மண்ணில் திருமலை சேத்துப்பட்டுப் பகுதியில் ஒரு காலத்தில் சமணம் செழித்திருந்தது. சுமய குரவர்களான திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் தேவாரத்தையும், மாணிக்க வாசகர் திருவா சத்தையும் நமக்குத் தந்தார்கள். திராவிட இயக்கங்களால் இன்று தமிழ் செழித்து வளர்ச்சியுறுகிறது. இதை முன்பு செய்தது பக்தி இலக்கியங்கள் தான் என்பதை நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

திருவண்ணாமலை மண்ணில் அருணகிரிநாதர் திருப்புகழைத் தந்தார். அவர் பதினான்காயிரம் பாடல்களை பாடினாலும், நமக்கு ஆயிரத்து மூன்னூற்று ஏழு பாடல்கள்தான் கிடைத்தன. இதில் சந்தம் அமைத்து பாடியவை ஆயிரத்து என் பத்தெட்டு பாடல்களாகும்.

திருவண்ணாமலையை நாங்கள் தொடங்கி இருக்கிற அருணை தமிழ்ச்சங்கம் அழியாத சங்கமாக திருவண்ணாமலையில் நிலைக்க வேண்டும் என்பதே என் ஆசை. திராவிட மும், ஆன்மிகமும் இரண்டற கலந்து பயணிக்கிற மண் இந்த திருவண்ணா மலை மண்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.

விழாவில் தமிழ்த் தொண்டிற்கான மறைமலை அடிகளார் விருது திருக்குறள் க.காமராசு, சமூக தொண்டிற்கான முத்துலட்சுமி ரெட்டி விருது ஹேமமாலினி, கலைத் தொண்டிற்கான என்.எஸ். கலைவாணர் விருது பாரி இளவழகன், ஆன்மிகத் தொண்டிற்கான கிருபானந்தவாரியார் விருது அப்துல் ரஹமான், சமூகநீதி காவலர்களுக்கான முத்தமிழ றிஞர் கலைஞர் விருது பட்டாபிராமன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

**கவிப்பேரரசு வைரமுத்து பேச்சு!**

மேலும் விருதுகளுடன் பொற்கிழியை கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் வழங்கி விழா பேருரையாற்றினார். அவரது உரை வருமாறு:-

அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் இரண்டு முதல்வர்களால் பாராட்ட பெற்றிருப்பவர். கல்வி நாயகனாக உள்ளார். எல்லோருக்கும் வள்ளல் எ.வ.வேலு என்று நான் கொண்டாடுகிறேன். அவர் நிறுவிய இந்த தமிழ்ச் சங்கங்கத்தில் அரசியல், மதம், சாதி, தனிப்பட்ட கருத்துகள் இல்லை. இதில் இருப்பதெல்லாம் மொழியும், இனமும் வாரியார் விருது பெற இஸ்லாமிய சகோதரரர் ஏற்று கொள்வாரா? என அமைச்சர் எ.வ.வேலுவை ஐயத்துடன் கேட்டுள்ளார். எனக்கு பெருமைதான் எனக்கூறி இஸ்லாமிய சகோதரர் வாரியார் விருதை பெற்றார். திருவண்ணாமலை காட்டுகிற இந்த மதநல்லிணக்கத்தை, தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியாவே பின்பற்ற வேண்டும்.

மொழிதான் பாரம்பரியத்தை நினைவூட்டுகிறது, இலக்கியத்தை புதுப்பிக்கிறது, மொழி இனம், சாதி, மதங்களைக் கடந்தது. இது போன்ற சங்கங்களில் இளைஞர்களை சேர்க்க வேண்டும். இருபத்தைந்து வயது முதல் முப்பது வயது வரை இருக்க வேண்டும். அவர்கள் கேள்விக் கேட்க வேண்டும். தமிழ்ச்சங்கம் என்பது அதிகார மையம் அல்ல, பழமையானவற்றை விவாதிக்க வேண்டும். தமிழ்ச் சங்கக் கூட்டத்தில் முப்பது விழுக்காடாவது பெண்கள் இருக்க வேண்டும்.

இளைஞர்களுக்காகவே நான் திருக்குறள் உரையை எழுதிவருகிறேன். இந்த நூற்றாண்டு இளைஞர்களுக்கு திருக்குறளின் அவசியத்தை அது உணர்த்தும்.

இவ்வாறு கவிப்பேரரசு வைரமுத்து பேசினார்.

கோலப்போட்டிகளில் பெற்றி பெற்றவர்களுக்கு தி.மு.க. மாநில மருத்துவர் மணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் பரிசுகளை வழங்கினார். விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் வசந்தம் கார்த்திகேயன், த.உதயசூரியன், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, நகர செயலாளர் ப.கார்த்திவேல் மாறன், துணை செயலாளர்கள் பிரியா விஜயரங்கன் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளை சேர்ந்த நிர்வாகிகள், தமிழ் ஆர்வலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை அருணை தமிழ்ச் சங்க செயலாளர் வே.ஆல்பர்ட், பொருளாளர் எம்.இ.ஜமாலுதீன், துணைச் செயலாளர் எ.வ. குமரன் ஆகியோர் எழுச்சியாகவும், சிறப்பாகவும் செய்திருந்தனர்.

நிறைவாக மாநகராட்சி மேயர் நிர்மலா வேல்மாறன் நன்றியுரையாற்றினார்.

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தருமபுரி மேற்கு மாவட்டம், காரிமங்கலம் மத்திய ஒன்றியச் செயலாளர் எல்.கிருஷ்ணன், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 20.01.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## பி.ஏ. சாமிநாதன்

### சனவரி 22 (2011)



மாணவப் பருவத்தில் "தமிழ்மன்றம்" என்ற அமைப்பினை தனது பகுதியில் துவக்கிய இவர், அப்போதிலிருந்தே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

ஒன்றுபட்ட கோவை மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றிய இவர், 1975இல் கோவையில் நடைபெற்ற தி.மு.க. மாநில மாநாட்டினை சிறப்பாக நடத்தினார்.

1958ல் புளியம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவராகவும் – 1967ல் கோபிச்செட்டிபாளையம் நாடாளுமன்றத் தொகுதியில் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான சி. சுப்பிரமணியத்தை எதிர்த்து, கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதே தொகுதியில் 1971ல் ஈ.வி.கே. சம்பத்தை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதியில் உள்ள ஏழையெளிய மக்களின் நன்மதிப்பைப் பெற்றார்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றார். குறிப்பாக நெருக்கடிகால மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### தருமபுரி மேற்கு மாவட்டம்

# காரிமங்கலம் மத்திய ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தருமபுரி மேற்கு மாவட்டம், காரிமங்கலம் மத்திய ஒன்றியச் செயலாளர் எல்.கிருஷ்ணன் அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **ர.கண்ண பெருமாள்** (சீகலஅள்ளி, அரியான்கொட்டாய் கிராமம், முக்குளம் அஞ்சல், காரிமங்கலம் வட்டம், தருமபுரி மாவட்டம் - 635 111) அவர்கள் காரிமங்கலம் மத்திய ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 20.01.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மிசா சோம. திருநாவுக்கரசு

### சனவரி 22 (2014)



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரது பேச்சாற்றலைக் கேட்டு கழகத்தில் இணைய வேண்டும் என்று முடிவெடுத்து கழகத்தில் உறுப்பினராகச் சேர்ந்தார்.

நெல்லை மாவட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் – மாவட்டப் பொருளாளர் ஆகிய பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

நெல்லை நகர் மன்ற உறுப்பினராகப் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதுடன், கூட்டுறவு வங்கி, அர்பன் வங்கி ஆகியவற்றில் இயக்குநராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, மொழிப் போராட்டத்தில் பங்கு பெற்று சிறையில் அடைக்கப்பட்டார். 'மிசா' சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**